**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.82
https://ngmtamil.in/

# சங்க இலக்கிய கபிலர் பாடல்களில் ஆசிரியப்பா பயிலும் முறை

**முனைவர். ரா சத்யா,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி.

வீராச்சிபாளையம், சங்ககிரி.

**ஆய்வுச்சுருக்கம்**

யாப்பு பாடல்களை படைக்க உதவும் கருவி மட்டுமன்று ஏற்கனவே படைக்கப்பட்ட இலக்கியங்களை பாதுகாக்கும் கருவியும் கூட மேலும் பாட வேறுபாடுபகளையும் பதிப்புச் சிக்கல்களையும் எதிர்கொள்ள யாப்பு பயன்பாடு பெரிதும் நம்பகமான மூலவடிவத்தைப் பெற உறுதுணையாக உள்ள யாப்பின் பயன் மிகப்பெரியது என்கிறார் அறிஞர் எல்லீசு . சங்க இலக்கிய கபிலரின் பாடல்களில் கலித்தொகையில் மட்டும் கலிப்பா பயின்று வந்துள்ளது. மற்ற அனைத்து பாடல்களும் ஆசிரியர்பாவாளான பாடல்களாகவே அமைந்துள்ளது.

பா வகைகளுல் ஆசிரியர்பாவையே முதலில் வைத்துக் கூறுகிறது தொல்காப்பியம் ஆசிரியம் என்பது பூர்வீகப் பாடல்களில் வளர்ச்சியாய் தமிழ் பாக்களில் மூலப்பாவாக விளங்குகிறது . ஆசிரியப்பாவுக்கு அடிப்பெருமை ஆயிரமாக தொல்காப்பியம் கூறுகிறது. யாப்புநூல் அருட்பா அகவல் ஆயிரத்து எண்ணுற்று எச்சம் அடி நிலைமண்டிலமாய் வருதலின் இரண்டாயிரம் பாடல் பேரெல்லையாயிற்று.

யாப்பிலக்கண உறுப்புகளான எழுத்து ஆசை சீர் தளை அடி தொடை பா பாவினங்களோடு யாப்பிலக்கணம் பற்றிக்கூறும் நூல்களான தொல்காப்பியம் யாப்பருங்கலம் காரிகை தொன்னூல் விளக்கம் வீரசோழியம் யாப்பதிகாரம் யாப்பொளி போன்ற நூல்களின் வாயிலாக யாப்பிலக்கணக் கூறுகளில் தற்போது ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்களையும் சங்கக் கபிலர் பாடல்களில் ஆசிரியர்பா பயின்று வரும் தன்மையினையும் தொகுத்து இவ்வாய்வில் வழங்கப்பட்டுள்ளது.

இலக்கியத்தை அடிப்படையாக கொண்டு பிறப்பது இலக்கணம் என்பது முன்னோர் வகுத்த நெறி இதனை அடிப்படையாக கொண்டு யாப்பருங்கலம் கூறும் யாப்பு உறுப்புகளோடு சங்க இலக்கிய கபிலர் பாடல்கள் எந்த அளவிற்கு பொருந்தி வந்துள்ளது என்பதை புலப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**யாப்பும்**

**தூக்கும் பாட்டும் தொடர்புஞ் செய்யுளை**

**நோக்கிற் றென்ப நுணங்கி யோரே.**

யாப்பெனினும் பாட்டெனினும் தூக்கெனினும் தொடர்பெனினும் செய்யுலேனினும் ஒரு பொரு தருபவை என்றார் தொல்காப்பியர்.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு ஆசிரியர் அல்லது பல ஆசிரியர்களால் இயற்றப்பட்ட பாட்டின் அல்லது பாட்டுத் தொகையினை “யாப்பு” விளக்குகிறது.

அடிகளால் தொடுக்கபாடுவது பாவாகும் சீர்இ தளை அடி ஆகிய உறுப்புகளால் தோன்றும் ஓசை வேறுபாடுகளால் பாக்கள் அல்லது யாப்பமைப்புக்கள் வேறுபடுத்தப்படுகின்றது. பாக்களை நான்காகப் பகுத்து கூறுகிறது தொல்யாப்பியல் மரபு சங்கப் பாடல்களில் ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, வெண்பா, பரிபா, மருட்பா ஆகிய ஆறுவகை பாக்கள் காணப்படுகின்றது. இவற்றில் ஆசிரியப்பா சங்க கபிலர் பாடல்களில் எவ்வாறு பயின்று வந்துள்ளது என்பதை இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

**சீரும், தளையும்**

**ஈரசை கொண்டு மூவசை புணர்ந்தும்**

**சீரியைந் திற்றது சீரெனப்படுமே. (தொல் 320)**

ஆசிரிய உரிச்சீரும் இயற்சீரும் தொல்காப்பியர் கருத்துப்படி ஈரசை சீர்களாகும். ஒரு ஆசிரிய அடியில் நான்கு சீரும் ஆசிரிய உரிசீராக வருவது. பொதுவான வடிவம் சங்க இலக்கியத்தை பொறுத்த வரையில் ஒரு ஆசிரிய அடியில் இரண்டு ஆசிரிய உரிசீர்கள் வருகின்றன. மூன்றோ நான்கோ வரும் அடி இல்லை ஆசிரிய உரிசீர்களை இடப்பெயர்ச்சி செய்வதில் இயற்சீர் முதலிடம் பெறுகின்றது. அடுத்து வெண்சீரும், வஞ்சிசீரும் பெற்றுப் பிறழ்ச்சி வடிவங்களைப் பெறுகின்றது. இத்தகைய இடப்பெயர்ச்சியை “சீர் மயக்கம்” என்று தமிழ் யாபிலக்கான நூலார் குறிப்பிடுவர், வஞ்சிச்சீரைக் காட்டிலும் வெண்சீரே சங்கப் பாடல்களில் சீர் மயக்கத்தில் இடம் பெறுகின்றன. நிறை நடுவாகிய வந்சியுருச் சீரும் விரவி வருகின்றது என்பதை அறிய முடிகின்றது.

**சான்று**

**(அ) ஆசிரியத்தில் வெண்சீர் மயங்கள்**

தாமரைத் தான்தாது ஊத்தி மீமிசைச் (நற்-1¬)

தீதில் நெஞ்சத்துக் கிளவி நம் வயின் (குறு-106)

**(அ) ஆசிரியத்தில் வஞ்சியுரிசீர் மயங்கல்.**

நம்வயிற் புரிந்த கொள்கையோடு நொஞ்சத்து ( நற்-59 )

கிடங்கில் அன்ன விட்டுக் கறைக் கான்யாற்றுக் ( நற் – 65 )

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

ஆசிரியப் பாவிற்கு நேரொன்றாசிரியத்தளையும் நிரையொன்றாசிரியத் தளையும் உரிமையுடையவை. இருப்பினும் சீர் மயங்குவதால் தளை மயக்கம் ஏற்படுகிறது வெண்சீர் மயங்குவதால் வெண்சீர் வெண்டளையும்இ கலித்தளையும் மயக்குகிறதுஇ வஞ்சிசயுரிசசீர் மயங்குவதால் ஒன்றியவஞ்சித்தளையும் ஒன்றாத வஞ்சித்தளையும் மயக்குகிறது.

**அடிமயக்கம்.**

**நாற்சீர் கொண்டது அடியனைப்படுமே ( தொல் – 340 )**

**அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே ( தொல் –343 )**

என்பது அடியைபற்றிய தொல்காப்பியர் கருத்து.

இருசீர் குறலடி முச்சீர் சிந்தடி
நாற்சீர் அளவடி ஐஞ்சீர் நெடிலடி
அறுசீர் முதலென கழிநெடி லடியே

என்று தொகப்பியரை பின்பற்றி அமித சாகரர் ஐந்து வகையாக கூறுகிறார்.

தொல்காப்பியர் கருத்துப்படி ஆசிரியப பாவிற்கு அளவடியே சிறப்பானது. முச்சிரடியும் ஆசிரியத்தில் பயின்று வரும். சங்க இலக்கிய ஆசிரியப பாக்களில்இருசிசீரடியும் ஐந்து அருசீரடியும் மயங்கி வருகின்றன.

**சான்று**

முச்சீரடி மயங்கல்.

**நின்று கொய மலரும் நாடனொடு**
**ஒன்றன் தோழி ஒன்றினானே (ஐங் 208)**

இருசீரடி மயங்கல்

**கடுங்கண்ண கொல்களிற்றாற்**
**காப்புடைய வெழுமுருக்கிப்**
**பொன்னியற் புனை தோட்டியான்.( புறம் 14 )**

ஐஞ்சீரடி மயங்கல்

**இவரே பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை (புறம் 200-9)**

அறுசீரடி மயங்கல்

**ஒளிறு ஒள் வாடக் குழைந்த பைந் தும்பை**
**மணம் நாறு மார்பின் மறப் போர் அகுதை (புறம் 247)**

சங்க இலக்கிய ஆசிரியப்பாவில் வெண்பாவிற்குரிய அடியும் கலிப்பவிற்குரிய அடியும் வந்சியடிகளும் சில இடங்களில் மயங்கி வருகின்றது.

**சான்று:**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

வெண்பாவிற்குரிய அடி. மயங்கல்

**ஒன்றேன் அல்லன் ஒன்றுவென் குன்றத்துப்**

**பெருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை ( குறு -208 )**

கலிப்பாவிற்குரிய அடி மயங்கல்

**ஒன்று ஒள் வாடக் குழைந்த பைந் தும்பை (புறம் -235)**

**வந்சிப்பாவிற்குரிய அடி மயங்கல்**

**புலவு நாற்றதை பைந்தடி ( புறம் – 14 )**

ஆசிரியப்பாவின் ஓசை

**அகவலென்ப தாசிரி யம்மே ( தொல் – 386 )**

ஏந்திசை அகவல்

பாடல் முழுவதும் நேரோன்று ஆசிரியத்தளை அமைய பாடப்படுவது ஏந்திசை அகவல்.

சான்று

**குன்ற நாடன் கேண்மை என்றும் ( குறு (38 - 3 ) )**

துங்கிசை அகவல்

பாடல் முழுவதும் நிறையொன்று ஆசிரியத்தளை அமைய பாடுவது துங்கிசை அகவல்

**சான்று**

**வரைமிசை யருவியலின் வயின்வயி னுடங்கக் (பதிற் ( 62 – 2 )**

ஒழுகிசை அகவல்

நேருரோன்ராசிரிய தளையும் நிறையோன்ராசிரிய தளையும் விரவி வருவது ஒழுகிசை அகவல்

**சான்று**

**பொய்யா மரபி னுர்முது வேலன்**

**கழங்மெய்ப் படுத்துத் கன்னந் தூக்கி**

**முருகென பொலிவு மாயிற்**

**கெழுதகை கொல்லிவ ளணங்கி யோர்கே (ஐங் – 245 )**

**பிரிந்திசை அகவல்.**

ஆசிரிய தளை மட்டும் இல்லாமல் வெண்டளைஇ கலித்தளைஇ வந்சித்தளை களூல் மயங்கி வருவது பிரிந்திசை அகவல்.

**சான்று**

**உடும்பு கொரிஇ வரிநுணல் அகழ்ந்து**

**நெடுங்கோட்டுப் பபுற்றத்து ஈயல் கெண்டி**

**எல்லுமுய லெறிந்த வேட்டுவன் அம்சுவல்**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**பல்வேறு பண்டததொடைமறந் தில்லத்து ( நற் – 59 )**

**ஆசிரியப் பா வகைகள்**

சங்க இலக்கியத்தில் கபிலர் பாடகளில் எண்ணிக்கை 234 இவற்றில் அசிரிபப் பாவகையை சேர்ந்தவை 205 பாடல்கள் அந்த ஆசிரிப்பாக்களின் அடி அமைப்பை அடிப்படையாக கொண்டு மேலும் மண்டில ஆசிரியம்இநேரிசை ஆசிரியம் மயங்கிசை ஆசிரியம் என மூன்று பிரிவாக பிரித்துள்ளனர்.

**கடைஅயர் பாதம் முச்சிசீர் வரின் நேரிசை காமருசீர்**
**இடைய குன்றின் இனனைக்குறள்**
**எல்லா அடியும் ஒத்து நடைபெறும்**
**ஆயின் நிலைமண்டிலம் நடுஆதி அந்தத்து**
**அடைதரு பாதத்து அடிமறி மண்டிலம்.**

நேரிசை ஆசிரியம்.

ஈற்றயலடி முச்சீரான் வருவது நேரிசை ஆசிரிப்பா

**ஈற்றதன் அயலடி ஓர்சிர் குறைய**
**நிப்பது நேரிசை ஆசிரியம்மே – அவிநயம்**
**அந்த அடியின் அயலடி சிந்தடி**
**வந்தன நேரிசை ஆசிரியம்மே ( யாப்பருங்கலம் – 3 )**

சான்று

**அன்னாய் வாழிவெண் டன்னை யென்னை**
**தானு மலைந்த நெமங்குந் தனழாயின**
**பொன்வீ மனியரும் பினவே**
**யென்ன மரந்கொலவர் சார லல்வே ( ஐங் – 201 )**

நிலைமண்டில ஆசிரியம்தான் முதன்தலில் தோன்றியது என்று ந.வீ.செயராமன் குரிபிட்டாலும் அதற்கான வலுவான சான்றுகள் கொடுக்கவில்லை.தொல்காப்பியத்தையும் ஆசிரியாப்பாவின் அமைப்பினையும் நோக்கும்பொழுது நேரிசை ஆசிரியம்மே தொன்மையானது என்பதை அறியமுடிகிறது.

மண்டில ஆசிரியம்

ஆசிரியப்பாவில் எல்லா அடிகளும் நுற்சீரடிகளால் அமைந்து வருவது மண்டில ஆசிரியம் பொருட்கோள் அடிப்படையில் இதனை மேலும் இருபிரிவுகளாக பிரிப்பார் ஒவ்வொரு அடியும் பொருள் தொடர்ச்சி அடிகளாக வந்தால் “நிலைமண்டிலம்” என்றலைப்பார் ஒவ்வொரு அடியும்

தன்னளவில் பொருளை முடித்து அடிகளை மாற்றிப் போட்டாலும் கருத்தில் முரண்பாடு இன்றி அமைவது அடிமரிமண்டிலம்.

**ஒத்த அடித்தாய் உடையா மரபொடு**

**நிற்பது தானே நிலை மண் டிலமே**

என்றார் அமித சாகரர்

**உரைப்போர் குறிப்பின் உணர்வாக தம்முள்**

**இடைப்பால் முதல்ஈறு என்றிவை தம்முள்**

**மதிக்கப் படாதன மண்டில யாப்பே**

என்றார் காக்கைபாடினியர்

**சான்று**

நிலைமண்டிலம்

**பெருவரை வேங்கைப் பொன்மறு ணறுவீ**

**மனினப் பெருக்கிளை மேய லாருங்**

**காகை நாடன் வரவு மிவண்**

**மேனி பசப்ப தெவன்கொ லன்னாய் ( ஐங் – 217 )**

அடிமறிமண்டில அமைப்பு ஆசிரியப்பாவிற்கு மட்டும் உரியது அல்ல வென்பா கலிப்பா வஞ்சிப்பாஇ விருத்தம்இஆகிய எல்லாவற்றிற்கும் வருவது ஆதலால் இதனை ஒரு தனிபிரிவாக கொள்ளத் தேவையில்லை. என்று சங்கப்புலவர் கூறுவர் சங்க ஆசிரியப் பாக்களில் அடிமறிமண்டில அமைப்பு காணப்பட வில்லை.

**மயங்கிசை ஆசிரியம்.**

**அளவடி அந்தமும் ஆதியும் ஆகிக்**

**குறலடி சிந்தடி என்றா இரண்டும்**

**இடைவர நிற்பது இணைக்குறள் ஆகும்.**

என்பது காக்கைபாடினியார் கூற்று.

**இடையிடை சீர்தபின் இணைக்குறள் ஆகும்**.

என்பது சிறுகாக்கைபாடினியார் கூற்றுஇ

ஆசிரியப்பாவின் பாட்டின் முதலிலோ இடையிலோ இருசீரடிகளும் முச்சீரடிகளும் விரவி வருகின்றன. முதலடியும் இறுதியும் நாற்ச்சீராக இருக்க அவ்விரண்டுக்கும் இடையில் இருசீரடியும்இ முச்சீரடியும் கலந்து வந்தால் அவை இணைகுறள் ஆசிரியம்” என்பர் இடைக்கால யாப்பிலக்கணத்தார் இப்பெயர் பொருத்தமானதாக இல்லை என்று கூறி” இடைகுறள் ஆசிரியம்” என்று பெயரிட்டு தன் கருத்தை விளக்கியுள்ளார். நவீ செயராமன்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

சங்க ஆசிரியப்பாக்கள் பாட்டின் இடையில் மட்டுமின்றி பாட்டின் தொடக்கத்திலும் இருசீரடியும் முச்சீரடியும் வருகின்றன.இவற்றையும் இந்தவகை' ஆசிரியத்தில் அடக்கிக் கூற வேண்டியுள்ளது எனவே இணைகுறள் இடைக்குறல் ஆசிரியம் என்பதைத் காட்டிலும் மயங்கிசை ஆசிரியம் என்று அலைப்பது பொருத்தமாக இருக்கும்.

மயங்கிசை ஆசிரியத்தில் பெரும்பாலும் இருசீரடிகளே அதிகமாக வருகின்றன இவை வஞ்சியடிகளாக உள்ளது. முச்சீரடிகளும் இவற்றில் விரவிவருகின்றன. ஐஞ்சீரடியும்இஅருசீரடியும் விரல்விட்டு எண்ணும் அளவில் குறைவாக வருகின்றன.

**முதனிலை மயங்கிசை ஆசிரியம்.**

**களிறுகடைஇய தாள்**
**மாவுடற்றிய வடிப்பு**
**சமந்ததைந்த வேல்**
**கல்லலைத்த தோள்**
**வில்வித்த நல்வலத்து**
**வண்டிசை கடாவாத் தண்பணம் போந்தைக்**
**குவிமுகமுகி வேண்டோடு கொண்டு (பதிற்று – 70 )**

பாட்டின் முதலில் மட்டும் இருசீரடிகளும் முச்சீரடிகளு பாட்டின் முதலில் அமைந்து முதனிலை மயங்கிசை ஆசிரியம் என்று அறியமுடிகிறது.

**இடைநிலை மயங்கிசை ஆசிரியம்.**

**அளிதோ தானே பாரியது பறம்பே**
**நளிகொள் முரசின் மூவிரும் முன்றினும்**
**உழவர் உழாதன நான்குபயன் உடைந்தே**
**ஒன்ரே கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீல்க்கும்மே**
**நான்கே அணிநிற ஓரி பாய்தலின் மீதுஅழிந்து (புறம் – 09 )**

பாட்டின் இடைநிலை இருசீரடியும்இ முச்சீரடியும் ஐஞ்சீர்இ அறுசீர் அடிகளும் கலந்து வரும் பாக்கள் இடைநிலை மயங்கிசை ஆசிரியம்.

**முதலிடை நிலை மயங்கிசை ஆசிரியம்.**

**கடுகண்ண கொல்களிற்றாற்**
**கப்புடைய வெழுமுருக்கிப்**
**பொன்னியர் புனைதோட்டியான்**
**முன்புதுரந்து சமந்தாங்கவும்**
**பாருடைத்த குண்டகழி**

**நீரமுவ நிவப்புக்குரறித்து**

**நிமிர்பரிய மாதாங்கவும்**

**புலவு நாற்றத்தை பைந்தடி (புறம் – 14 )**

இவ்வாறு பாட்டின் முதலிலும் இடையிலும் இருசீரடிகளும் முச்சீரடிகளும் கலந்து வருவது முதலிடை நிலை மயங்கிசை ஆசிரியம்.

அளவியலும் சங்க ஆசிரியப்பாவும்.

அளவியலைச் செய்யுளின் உறுப்பாகத் தொல்காப்பியர் ஒருவரே கூறியுள்ளார் "யாப்பு" பாட்டு" ஒன்றே அடிவரையறைள்ள செய்யுள் என்பதும் அவரது கருத்தாகும். பழந்தமிழ் புலர்வர்களும் அளவியலை அடிபடையகாக கொண்டு சங்கபாடல்களைத் தொகுத்தனர் ஆசிரியப்பாவிற்கு சிற்றெல்லை மூன்று பேரெல்லை ஆயிரம் என்று கூறுவர் யப்பியலாளர் 782 அடிகளை கொண்ட மதுரைகாஞ்க்சிதான் மிக அதிக அடிகளைக் கொண்ட ஆசிரியப்பா ஆகும். நான்கடி கொண்ட ஆசிரியப்பாக்களே சங்க இலக்கியத்தில் அதிகம். 48 வகையான அடி எண்ணிக்கையைக் கொண்டதைக் சங்க ஆசிரியப்பா உள்ளது.தொகை நுல்களில் இரண்டு எல்லைகளும் அளவியலில் துல்லியமாக இல்லை. மயக்கம் உண்டு இக்குறைபாடுகள் வாய்மொழி மரபினால் அல்லது ஏடுஎழுதும் வழக்கத்தினால் தோன்றியிருக்காலம் என அறியமுடிகிறது.

**ஆசிரியப்பாவின் ஈற்றசை**

**அகவ லிசையன அகவல் மற்றவை**

**ஏஇஓ ஈ ஆய் என் ஐ யென் றிருமே ( யாப் – 69 )**

ஒரு இலக்கியத்தின் வடிவமைப்பை ஆராயும்போது அது எவ்வாறு முடிவுறுகிறது என்பதை ஆய்வது அவசியமாகிறது பாட்டுமுடியும் தன்மையை விரிவாக பாட்டு முடிப்பு (pழநவசi உ உடளரசந ) என்னும் நுலில் பி.எச்.ஸ்மித் பாட்டில் அது சில குறிப்பிட்ட கூறுகளால் அமைகிறது என்றும் விளக்குவர்.

தொல்காப்பியர் அசிரிப்பாஇ வெண்பா எவ்வாறு முடிய வேன்டும் என்று கூறியுள்ளார் நேரிசை ஆசிரியத்தின் ஈற்றயலடி மூச்சீரடியாகவும் வெண்பாவின் ஈற்றடி மூச்சீராகவும் இருக்கும். நேரிசை ஆசிரியத்தில் வரும் மூச்சீரடியின் இருதிசீர் ஈரசைசீர் (அ) மூவசை சீராக இருக்கும் ஆனால் வெண்பாவின் ஈற்றுச்சீர் ஓரசைசீராக இருக்கும்.

சங்க ஆசிரியப்பாக்களில் ஏகாரமே பெரும்பாலும் ஈற்றசையாக வருகிறது இருப்பினும் ஆய்இ ஒஇ மோ ஆகியனவும் ஈற்றில் வருகின்றன.

**ஏகார ஈற்றசை**

**புலவி உணர்த்தல் வன்மை யானே (நற் – 217 )**

**ஆய் என்னும் ஈற்றசை**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**மேனி பசப்பது வென்கொல்? அன்னாய் ( ஐங் – 217 )**

**ஒகார ஈற்றசை**

**யாங்கு எனப் படுவது நம்மூர் தொய்யோ! ( ஐங் – 237 )**

**மோ என்னும் ஈற்றசை**

**மால்வரை நாட வரைத்தான் கொன்மோ ( ஐங் – 289 )**

**முடிவுரை**

ஆசிரிப்பாவில் அதற்குரிய சீரும் தளையும் மட்டுமின்றிப் பிற பாக்களுக்குரிய சீரும் தளையும் வரலாம். அது போல பிற அடிகளும் கலந்து வரலாம் என்று அறியும்போது ஆசிரிப்பாவில் அதிகக் கட்டுப்பாடில்லை.

சங்க பாடல்கள் ஒவ்வொன்றும் ஒருபொருள்இ ஓர் உணர்சி ஒரு கூற்று என்னும் அடிபடையில் அமைந்தவை இவைகள் நாடக முன்னிலைப் பாக்கள் தன்னுர்சிசிப் பாங்கினை உடையவை எனவே தன்னுர்சிசிப் பாங்கினை நாடக முன்னிலை உத்தியில் வெளியிட ஆசிரிப்பா பொருத்தமான வடிவமாக ஆளப்பட்டிருக்கின்றது.

அடிமறி மண்டில வகையை சேர்ந்த ஆசிரிப்பா சங்க இலக்கிய கபிலர் பாடல்களில் இல்லை.

**துணைநுல்லபட்டியல்**

[1]. **கேசிகன், புலியூர்க்.** *தொல்காப்பியம்.* பாரி நிலையம், 2007.

[2]. **மாணிக்கம், வ.சுப.** *யாப்பருங்கலக்காரிகை.* அண்ணாமலை பல்கலைக்கழகம், 2003.

[3]. **பிச்சை, அ.** *சங்க இலக்கிய யாப்பில்.* நியு செஞ்சுரி புக்கவுஸ், 2010.

[4]. **திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.** *பதிற்றுப்பத்து.* கழக வெளியீடு

[5]. **திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.** *புறநானூறு.* கழக வெளியீடு,

[6]. **திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.** *அகநானூறு.* கழக வெளியீடு

[7]. **திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.** *குறுந்தொகை.* கழக வெளியீடு,

[8]. **திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.** *ஐங்குறுநூறு.* கழக வெளியீடு,